**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – தாட்கோ – 2022-2023-ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள் – மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – 50 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கு ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் ஆவின் பாலகம் அமைக்க ரூ.45.00 இலட்சம் மானியம் வழங்குதல் – நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉ_தி)துறை**

அரசாணை (நிலை) எண். 95 நாள்:21.10.2022

சுபகிருது வருடம், ஐப்பசி 4 ஆம் நாள்

திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டது:-

மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்களின் கடித ந.க.எண்.ஜி1/1952/2022, நாள்.31.05.2022, 26.07.2022 மற்றும் 10.09.2022.

**********

ஆணை:-

2022-2023-ஆம் ஆண்டிற்கான துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள், கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்கள் :-

**"50 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்திடும் வகையில் உறைவிப்பான் (Freezer) குளிர்விப்பான் (Chiller) போன்ற உபகரணங்கள் கொள்முதல் செய்து ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் ஆவின் பாலகம் அமைத்து வருவாய் ஈட்டிட ரூ.45.00 இலட்சம் மானியம் வழங்கப்படும்."**

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக, மேலே படிக்கப்பட்ட தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துருவில், கீழ்க்கண்டவாறு நிதி தேவைப்படுகிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

| வ. எண் | நபர்களின் எண்ணிக்கை | திட்ட தொகை | பயனாளி பங்கு தொகை | தாட்கோ மான்யம் | வங்கி கடன் |
|---|---|---|---|---|---|
| 1 | 40 ஆதிதிராவிட தொழில் முனைவோர் | ரூ.3.00 இலட்சம் (3.00 இலட்சம் x 40 நபர்கள் =ரூ.120.00 இலட்சம்) | ரூ.15,000 (ரூ.15,000x40 நபர்கள்=ரூ.6.00 இலட்சம்) | ரூ.90,000 (ரூ.90,000x40 நபர்கள் = ரூ.36.00 இலட்சம்) | ரூ.1.95 இலட்சம் (ரூ.1.95 இலட்சம்x40 நபர்கள்= ரூ.78.00 இலட்சம்) |
| 2 | 10 பழங்குடியின தொழில் முனைவோர் | ரூ.3.00 இலட்சம் (3.00 இலட்சம் x 10 நபர்கள் = ரூ.30.00 இலட்சம்) | ரூ.15,000 (ரூ.15,000x10 நபர்கள்=ரூ.1.50 இலட்சம்) | ரூ.90,000 (ரூ.90,000x10 நபர்கள் = ரூ.9.00 இலட்சம்) | ரூ.1.95 இலட்சம் (ரூ.1.95 இலட்சம்x10 நபர்கள்= ரூ.19.50 இலட்சம்) |
| மொத்தம் | 50 பயனாளிகள் | ரூ.150.00 இலட்சம் | ரூ.7.50 இலட்சம் | ரூ.45.00 இலட்சம் | ரூ.97.50 இலட்சம் |

3. மேலும், 2022-2023-ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் 40 ஆதிதிராவிடர் தொழில் முனைவோர்களுக்கு ஒன்றிய அரசு (SCA to SCSP) நிதியிலிருந்து ரூ.36.00 இலட்சம் மானியமாக (ரூ.90,000 x 40 நபர்கள்) பயன்படுத்திக்கொள்ள அனுமதியும், 10 பழங்குடியின தொழில் முனைவோர்களுக்கு மாநில அரசு நிதியிலிருந்து ரூ.9.00 இலட்சம் மானியமாக (ரூ.90,000 x 10 நபர்கள்) பயன்படுத்திக்கொள்ள நிதி ஒப்பளிப்பு மற்றும் நிருவாக அனுமதி வழங்குமாறு தாட்கோ மேலாண்மை இயக்குநர் அரசிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் மின் வாகனம் (E-Vehicle), உறைவிப்பான் (Freezer), குளிர்விப்பான் (Cooler) போன்ற உபகரணங்கள் கொள்முதல் செய்து ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் ஆவின் பாலகம் அமைத்து வருவாய் ஈட்டிட, ரூ.45,00,000(ரூபாய் நாற்பத்தைந்து இலட்சம் மட்டும்) மானியம் வழங்க ஏதுவாக, 40 ஆதிதிராவிடர் தொழில் முனைவோர்களுக்கு ரூ.36,00,000 (ரூபாய் முப்பத்தி ஆறு இலட்சம் மட்டும்) மானியமாக ஒன்றிய அரசு நிதியிலிருந்து செலவிட நிருவாக அனுமதி வழங்கியும் மற்றும் 10 பழங்குடியின தொழில் முனைவோர்களுக்கு ரூ. 9,00,000 (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) மாநில அரசு நிதியிலிருந்தும் பெற்று வழங்க நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி-4-இல் 10 பழங்குடியின தொழில் முனைவோர்கள் பயனடையும் விதமாக ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரூ. 9.00 இலட்சம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

**“2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் – 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – மாநிலச் செலவினங்கள் - KC பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் – 309 உதவித் தொகை – 02 மூலதனச் சொத்து உருவாக்குவதற்கான உதவித்தொகை.**
**(IFHRMS த.தொ.கு 2225 02 796 KC 30902)**

6. மேலே பத்தி 4-இல் மாநில அரசு நிதியிலிருந்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை, பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை, தாட்கோ மூலம் செயல்படுத்த ஏதுவாக இத்தொகையினைப் பெற்று தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல் கீழ்க்காணும் அலுவலக பெயர் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர்வரவாக (Contra Credit) வரவு வைப்பதற்கு பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்து அதிகாரம் வழங்கப்படுகிறது.

**“K வைப்புத் தொகைகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டியில்லா வைப்புத் தொகைகள் 8443 - 00-உரிமையியல் வைப்புத் தொகைகள் 800 பிற வைப்புத் தொகைகள் – BY தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சி கழக் வைப்புத் தொகைகள் – தாட்கோவின் வைப்புத் தொகைகள்.” 801 - வரவுகள் 02 – வட்டி பெறா வைப்பீடுகள் – 802 – வழங்குதல் -02-வட்டி பெறா வைப்பீடுகள்.**
**(த.தொ.கு.8443 00 800BY 80102) (Receipt)**
**(த.தொ.கு.8443 00 800 BY 80202) (Outgo)**

7. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.9,00,000/-ம் 2022-2023-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2022-2023-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி(ஆதி(ம)பந)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு பழங்குடியினர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கபட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு ஆதிதிராவிட இயக்குனர்/ பழங்குடிநர் நல இயக்குனர் கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

9. இத்திட்டத்தினை செயல்படுத்த இணைப்பில் உள்ள வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றுமாறு தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு,எண். 45925/நிதி (தி(ம)பந)/2022, நாள்.20.10.2022-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கம் பேரேட்டு எண்.1571 (ஆயிரத்து ஐநூற்று எழுபத்தொன்று) (IFHRMS ASL No.2022101571)

//ஆளுநரின் ஆணைப்படி//

தென்காசி சு ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர் , ஆதி திராவிடர் நலம், சென்னை-5.
இயக்குநர் ,பழங்குடியினர் நலம், சென்னை- 5.
மேலாண்மை இயக்குநர் , தாட்கோ , சென்னை -18.
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்கள் ,
(இயக்குநர் ஆதிதிராவிடர் நலம் வழியாக)
அனைத்து மாவட்ட மேலாளர்கள், தாட்கோ,
(மேலாண்மை இயக்குநர் தாட்கோ, வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர் ,சென்னை 9/18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் , சென்னை-8.
மாவட்ட திட்ட அலுவலர் ,( பழங்குடியினர் நலம்)
(சேலம், தர்மபுரி, நாமக்கல், திருச்சி,
திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர்)

நகல் :-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் ,சென்னை-9.
ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர் , சென்னை -9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல
கூடுதல் தலைமைச் செயலாளரின்
தனிச் செயலாளர் , சென்னை-9.
நிதி (ஆதி (ம )பந) / வரவு-செலவு (பொது-I/II/வ.வ-I) த்துறை , சென்னை -9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல
(அநமு -1 / ஆதிந-5 / ப.மே 1) த் துறை ,சென்னை-9.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/10/22
பிரிவு அலுவலர்
27/10/22

**இணைப்பு**

**அரசாணை (நிலை) எண்.95, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉ தி)துறை, நாள். 21.10.2022.**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின** தொழில் முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்திடும் வகையில் மின் வாகனம் (E-Vehicles), உறைவிப்பான் (Freezer), குளிரிவிப்பான் (Cooler) போன்ற உபகரணங்கள் கொள்முதல் செய்து ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் ஆவின் பாலகம் அமைக்கும் திட்டம் செயல்படுத்த வழிகாட்டு நெறிமுறைகள்.

**தகுதி**

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும்.
- 18-65 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின்கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.
- கூடுதல் செலவினத்தை ஈடுசெய்யவும் மற்றும் அதிகபட்ச மானியத்தொகை சென்றடைய, ஆதிதிராவிட தனி நபர்களுக்கான திட்டத்தொகையில் 30% விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.2.25 இலட்சம் மானியமும் மற்றும் பழங்குடியினர் தனி நபர்களுக்கான திட்டத்தொகையில் 50% விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் மானியம் விடுவிக்கப்படும்.

**நிபந்தனைகள்**

- ஆவின் பாலகம் அமைக்க தேர்ந்தெடுக்கப்படும் கடையின் இடம் குறைந்தபட்சம் 100 சதுர அடியாக இருக்க வேண்டும். விண்ணப்பதாரருக்கு சொந்த / குத்தகை / வாடகைக் கட்டிடம் இருக்கலாம். அதற்கான ஆதாரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் அருகில் உள்ள மண்டல அலுவலகத்திலிருந்து விண்ணப்பப் படிவத்தை பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பித்தவுடன் அந்தந்த மண்டல அலுவலகத்தின் பொது மேலாளர் (Marketing) மற்றும் துணை பொது மேலாளர் (Marketing) கடையை மதிப்பீடு செய்து, ஒதுக்கீட்டு (முதலாவது) உத்தரவை வழங்குவார்கள்.
- விண்ணப்பதாரர் மற்றும் ஆவின் நிறுவனம் இடையே போடப்படும் ஒப்பந்தத்தில் உள்ள அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டு ஒப்பந்தம் போட வேண்டும். அவ்வாறு போடப்படும் ஒப்பந்தம் ஒவ்வொரு 2 வருடங்களுக்கும் புதுப்பிக்கப்படும்.
- வணிகத்தை தொடங்குவதற்கு முன், விண்ணப்பதாரர் (FSSAI) நிறுவனத்திலிருந்து உணவு உரிமத்தைப் பெற வேண்டும்.
- அடையாள பலகை (Sign Board), உட்புற வடிவமைப்பு (Interior) போன்றவற்றை விண்ணப்பதாரரே மேற்கொள்ள வேண்டும்.
- குளிர்விப்பான் (Cooler) மற்றும் உறைவிப்பான் (Freezer) குறைந்தபட்ச கொள்ளளவு 200 லிட்டர் ஆகும்.
- ஆவின் பொருட்கள் ஆவின் மூலம் விற்பனை நிலையத்திற்கே நேரடியாக சென்று விநியோகம் செய்யப்படும். அவற்றிற்கான பணத்தை உடனடியாக செலுத்த

வேண்டும். சில்லறை விற்பனை விலை ஒவ்வொரு தயாரிப்புக்கும் 6 % முதல் 15% வரை மாறுபடும்.

- ஆவின் பால் பொருட்களை MRP விலையில் மட்டுமே விற்க வேண்டும் அதிக விலைக்கு விற்பனை செய்வது தெரிய வந்தால் ஆவின் நிறுவனம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் எந்த அறிவிப்பும் இன்றி சில்லறை விற்பனையை நிறுத்துவதற்கும் வழிவகுக்கும்.
- விண்ணப்பதாரர் ஆவின் நிறுவனத்தால் அவ்வப்போது செயல்படுத்தப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.
- ஆவின் நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கின்படி விற்பனை செய்ய வேண்டும். குறைந்தபட்சமாக ஒரு மாதத்திற்கு விற்பனை செய்ய வேண்டிய இலக்கு ரூ.5,000/- ஆகும்.

**விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முறை**

கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு மாவட்ட மேலாளர், தாட்கோ ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு பயனாளிகளைத் தேர்வுசெய்யும்.

| | |
|---|---|
| மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| மாவட்ட மேலாளர், தாட்கோ | ஒருங்கிணைப்பாளர் மற்றும் உறுப்பினர் |
| திட்ட அலுவலர், மகளிர் திட்டம் | உறுப்பினர் |
| இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை | உறுப்பினர் |
| முன்னோடி வங்கி மேலாளர் | உறுப்பினர் |
| சம்பந்தப்பட்ட வங்கியின் ஒருங்கிணைப்பாளர் | உறுப்பினர் |
| பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் | உறுப்பினர் |
| மாவட்ட பதிவாளர் (பால் வளம்) | உறுப்பினர் |

தென்காசி சு ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

// உண்மை நகல்//

ஏ. சந்திரசேகர் 27/10/22
பிரிவு அலுவலர்.

27/10/22